# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
# அறிவியல் தமிழ் மன்றம், சென்னை

இணைந்து நடத்தும்

# அறிவியல் தமிழ்க் கண்காட்சி – 2010

அக்டோபர் 29 மற்றும் 30

## சுற்றறிக்கை

### நோக்கம்

அறிவியலின் வளர்ச்சியே மனித சமுதாய வளர்ச்சிக்கும் உலக மேம்பாட்டுக்கும் அடிப்படை. இந்த அறிவியல் அறிவின் வழிப்பட்ட அறிவியலாளர்களின் பெருக்கமே உலகமுன்னேற்றத்திற்கான அச்சாணி “ யதார்த்தமான பொருண்மை உலகைப் பற்றிய **அறிவியலிலிருந்தே** மனிதன் தனது ஆற்றலைப் பெறுகின்றான். அந்த உலகின் விதிகளை எந்த அளவிற்குப் **புரிந்துகொள்கின்றானோ** அந்த அளவுக்கு அதனை அவனால் தன்வசப்படுத்த முடியும்” (மனிதசாரம், 2005) என **ஜார்ஜதாம்சன்** குறிப்பிடும் **ஆற்றல் பெருக்கமும் புரிந்துகொள்ளுதலும், தன்வயப்படுத்தலும்** நிகழ தாய்மொழிவழிக் கல்வியே பெரிதும் துணைசெய்ய வல்லது. தாய்மொழிவழி பெறும் கல்வியே இயல்பான புரிதலுக்கும் தனிமனித அறிவுவளர்ச்சிக்கும் சமுதாய மேன்மைக்கும் கல்வியை மனப்பாடமாய் அல்லாமல் **உலக வளர்ச்சிக்கான அறிவாய்** பெற்று உயர்வதற்கும் வழிவகுக்க வல்லது. தாய்மொழிவழி புரிந்துகொண்டு உள்வாங்கிக்கொள்ளப்படும் அறிவியலறிவே எதிர்கால அறிவியலின் வளர்ச்சிக்கும் இளம்அறிலியலாளர் உருவாக்கத்திற்கும் புதிய கண்டுபிடிப்புக்கும் சுயசிந்தனை மரபுக்கும் ஆதாரமாக அமையும்.

இத்தகைய தாய்மொழிவழிப்பட்ட அறிவியல் அறிவைப் பெறும் ஆர்வத்தை மாணவர்களிடம் ஊக்குவிக்க வேண்டியது நல்ல அரசின் முதன்மைக் கடமைகளுள் ஒன்று. இந்த நல்ல கடமை நிறைவேற்றத்தின் ஒரு பகுதியாகத் தமிழ்நாடு அரசின் **அறிவியல் தமிழ் மன்றம்** மாணவர்களிடையே அறியல்தமிழை வளர்க்கும் முகமாக அவர்களின் அறிவியல் ஆற்றலைப் பெருக்கும் விதமாக அறிவியல் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தி அவற்றைத் தமிழ்மொழி வழியே விளக்கும் அறிவியல் தமிழ்க் கண்காட்சி ஒன்றை மாநில அளவில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தமிழில் காட்சிப்படுத்தி விளக்கவிருக்கும் இரண்டாவது அறிவியல் கண்காட்சியாக இது அமையவுள்ளது. “ வீரத்தமிழ், அழகுத்தமிழ், நளினத்தமிழ், இன்பத்தமிழ், மாத்திரம் இருந்தால் போதாது, அறிவியல் தமிழும் வேண்டும். அதை வளர்க்கின்ற முயற்சியிலே நாம் மென்மேலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்” என்ற நமது முத்தமிழ்க் காவலர், மாண்புமிகு தமிழக முதல்வர், முனைவர் கலைஞர் அவர்களின் கூற்றுக்கிணங்கவும், “அறிவியல் செல்வத்தை தமிழ் மொழிப்பயிற்சியின் ஊடே இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பல திட்டங்களை மிக நிதானத்துடனும், சிறப்பாகவும் பணியாற்றிக் கொண்டுவரும்” நமது மாண்புமிகு துணை முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் கனவுக்கேற்றபடியும், இந்த அறிவியல் கண்காட்சியை தமிழ்நாடு **அறிவியல் தமிழ் மன்றத்துடன் இணைந்து நடத்தும்** பொறுப்பை **மகாகவி பாரதியார்** பெயரால் கோவையில் அமைந்துள்ள **பாரதியார் பல்கலைக்கழகம்** ஏற்றுள்ளது.

### அறிவியல் எண்ணங்களின் நவீன கண்டுபிடிப்புகளின் செயல்மாதிரிகளும் மாணவர் தெரிவும்

மாணவர்களே எதிர்கால இந்தியாவின் அறிவியலாளர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த அறிவியல்தமிழ்க் கண்காட்சி **மேனிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரிமாணவ மாணவியர்களைப் பங்கேற்பாளர்களாகக்** கொண்டு நடத்தப்பெறவுள்ளது. மாணவர்களிடம் உறங்கிக்கிடக்கும் அறிவியலறிவை, அறிவியல்தமிழ் ஆற்றலை வெளிக்கொணர வேண்டும். அவர்களைத் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் இனங்காட்டி அறிவியல்தமிழை மேம்படுத்த வேண்டும். **அறிவியல் எண்ணங்களை, நவீன கண்டுபிடிப்புகளைச் செயல்மாதிரிகள்** வாயிலாகப் பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் விளக்க வேண்டும் என்பனவே இந்தக் கண்காட்சியின் அடிப்படைநோக்கங்கள, இந்த நோக்கங்கள் நிறைவேற தமிழக பள்ளி, கல்லூரி இயக்குநர்கள், தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், பள்ளி-கல்லூரி ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகின்றது.

தமிழக மேனிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றிலிருந்து **1. கணிதம், 2. இயற்பியல், 3. வேதியியல், 4. தாவரவியல், 5. வில’கியல், 6. கணிணி அறிவியல், 7. உயிர் வேதியியல், 8. உயிர்த் தொழில்நுட்பவியல், 9. நுண்,,யிரியல், 10. புவியமைப்பியல், 11. உணவறிவியல் - வேளாண்மையியல், 12. சுற்றுச்சூழலியல், 13. மின்ன,,வியல் - தகவல்தொடர்பியல்** எனும் துறைகள் சார்ந்த **250** மாணவ, மாணவியர்கள் அறிவியல் கண்டுபிடுப்புகளை காட்சிப்படுத்தவும் தமிழில் செயல்முறை விளக்கம் அளிக்கவும் அழைக்கப்படவுள்ளனர்.

மூள்ளிக்கல்வி இயக்குனர், கல்லூரிக்கல்வி இயக்குனர் ஆகியோர்தம் இசைவுடன் அறிவியல் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தும் திறன்வாய்ந்த மாணவ, மாணவியர்களை தெரிவுசெய்து தலைமையாசியர்களின், கல்லூரிமுதல்வர்களின் பரிந்துரையுடன் அனுப்பும் பொறுப்பு குறிப்பிட்ட துறைசார் ஆசிரியர்களைச் சார்ந்தது.

இவ்வாறு பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் தெரிவுசெய்து அனுப்பப்பெறும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் காட்சிப்படுத்த’கள் பல்கலைக்கழகத் துறைசார் வல்லுநர்களால் தெரிவுசெய்யப்பெறும்.

## ஊக்கப் பரிசுகள்

ப’கேற்கும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு துறையும் சார்ந்த சிறந்த மூன்று காட்சிப்படுத்த’களுக்குப் பரிசுகள் வழ’கப்பெறும். ஒவ்வொரு பரிசும் பின்வரும் மதிப்பு உடையதாக அமையும்.

**முதல் பரிசு ( 13 ) ------ ` 2,000**

**இரண்டாம் பரிசு ( 13 ) ------ ` 1,500**

**மூன்றாம் பரிசு ( 13 ) ------ ` 1,000**

ஒட்டுமெத்தமாக **39 பரிசுகள்** வழ’கப்பெறும். ப’கேற்கும் பள்ளி, கல்லூரிகளுக்கும் உரிய மாணவர்களுக்கும் ப’கேற்புச் சான்றிதழ்களும் வழ’கப்பெறும்.

## அறிவியல் கண்டுபிடிப்புகளின் செயல்மாதிரிகள் பற்றிய சுரக்கவரைவு

தெரிவுசெய்து அனுப்பப்பெறும் அறிவியல்கண்டுபிடிப்புகள் அறிவியல் எண்ண’கள் பற்றிய செயல்மாதிரிகளின் சுரக்கமான, தெளிவான விவரத்தை இரண்டுபக்க அளவில் ( **தமிழ் - ஐஸ்வர்யா புள்ளி எழுத்துரவில் 1.5 இடைவெளியில்** ) தமிழில் தட்டச்சு செய்து அச்சுப்படியுடன் குறுந்தகட்டிலும் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும். எத்தனைக் காட்சிப்படித்த’கள் பரிந்துரைந்து அனுப்படவுள்ளனவோ அத்தணைக்கும் தனித்தனிச் சுரக்கவரைவு அனுப்பப்படல் வேண்டும்.

அறிவியல் கண்டுபிடிப்பைக் காட்சிப்படுத்துவதற்கு தேவைப்படும் இடஅளவு, தேவைப்படும் பிற வசதிகள் பற்றிய விவரத்தைச் சுரக்கவரைவுடன் அனுப்புதல் வேண்டும். **இவை அனைத்தும் அறியல்தமிழ்க் கண்காட்சியின் அமைப்பாளர் முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்.**

## இறுதிநாள்

அறிவியல் கண்டுபிடிப்புகளின் செயல்மாதிரிகள், அவைபற்றிய சுரக்கவரைவுகள் முதலியவற்றை **2010 அக்டேபர் 12ஆம் நாளுக்குள்** அனுப்புதல் வேண்டும்.

**<u>அறிவியல் தமிழ்க் கண்காட்சி அமைப்பாளர்</u>**

முனைவர். சி. நமச்சிவாயம்
அறிவியல் புல முதன்மையர் (Dean of Science)
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
சுற்றுச் சூூல் அறிவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் -641 046.
மின் அ’’சல் - cnamasivayam@yahoo.com தொலைபேசி – 0422 2428391

## தங்குமிடவசதி

கண்காட்சியில் பங்கேற்கும் மாணவ மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தங்குமிட வசதிகள் பல்கலைக்கழகத்தால் செய்துதரப்படும்.

## பயணப்படி

**கண்காட்சியில் பங்குபெறும் பள்ளி மற்றும் கல்லூரியின் ஒவ்வொரு மாணவர் / மாணவிக்கும், அவருடன் வரும் அறிவியல் துறையைச் சார்ந்த ஒரு ஆசிரியருக்கும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பயணப்படி வழங்கப்பெறும்.**

# பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
# அறிவியல் தமிழ் மன்றம், சென்னை

இணைந்து நடத்தும்

# அறிவியல் தமிழ்க் கண்காட்சி – 2010

அக்டோபர் 29 மற்றும் 30

-----------------------------------------------------------------------

மாணவா்களே எதிா்கால இந்தியாவின் அறிவியலாளா்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த **அறிவியல்தமிழ்க் கண்காட்சி மேனிலைப்பள்ளி, உயா்நிலைப்பள்ளி, கல்லூரிமாணவ மாணவியா்களைப் பங்கேற்பாளா்களாகக்** கொண்டு நடத்தப்பெறவுள்ளது. மாணவா்களிடம் உறங்கிக்கிடக்கும் அறிவியலறிவை, அறிவியல்தமிழ் ஆற்றலை வெளிக்கொணர வேண்டும். அவா்களைத் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் இனங்காட்டி அறிவியல்தமிழை மேம்படுத்த வேண்டும். **அறிவியல் எண்ணங்களை, நவீன கண்டுபிடிப்புகளைச் செயல்மாதிரிகள்** வாயிலாகப் பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் விளக்க வேண்டும் என்பனவே இந்தக் கண்காட்சியின் அடிப்படைநோக்கங்கள, இந்த நோக்கங்கள் நிறைவேற தமிழக பள்ளி, கல்லூரி இயக்குநா்கள், தலைமையாசிரியா்கள், கல்லூரி முதல்வா்கள், பள்ளி-கல்லூரி ஆசிரியா்கள், மாணவ மாணவியா்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகின்றது.

தமிழக மேனிலைப்பள்ளிகள், உயா்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றிலிருந்து **1. கணிதம், 2. இயற்பியல், 3. வேதியியல், 4. தாவரவியல், 5. விலங்கியல், 6. கணிணி அறிவியல், 7. உயிா் வேதியியல், 8. உயிா்த் தொழில்நுட்பவியல், 9. நுண்,,யிரியல், 10. புவியமைப்பியல், 11. உணவறிவியல் - வேளாண்மையியல், 12. சுற்றுச்சூழலியல், 13. மின்ன,,வியல் - தகவல்தொடா்பியல்** எனும் துறைகள் சாா்ந்த **250** மாணவ, மாணவியா்கள் அறிவியல் கண்டுபிடுப்புகளை காட்சிப்படுத்தவும் தமிழில் செயல்முறை விளக்கம் அளிக்கவும் அழைக்கப்படவுள்ளனா்.

பள்ளிக்கல்வி இயக்குனா், கல்லூரிக்கல்வி இயக்குனா் ஆகியோா்தம் இசைவுடன் அறிவியல் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தும் திறன்வாய்ந்த மாணவ, மாணவியா்களை தெரிவுசெய்து தலைமையாசியா்களின், கல்லூிமுதல்வா்களின் பரிந்துரையுடன் அனுப்பும் பொறுப்பு குறிப்பிட்ட துறைசாா் ஆசிரியா்களைச் சாா்ந்தது.

இவ்வாறு பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் தெரிவுசெய்து அனுப்பப்பெறும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் காட்சிப்படுத்தங்கள் பல்கலைக்கழகத் துறைசாா் வல்லுநா்களால் தெரிவுசெய்யப்பெறும்.

### ஊக்கப் பரிசுகள்

பங்கேற்கும் மாணவ மாணவியா்களை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு துறையும் சாா்ந்த சிறந்த மூன்று காட்சிப்படுத்தங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெறும். ஒவ்வொரு பரிசும் பின்வரும் மதிப்பு உடையதாக அமையும்.

**முதல் பரிசு ( 13 ) ------ ` 2,000**

**இரண்டாம் பரிசு ( 13 ) ------ ` 1,500**

**மூன்றாம் பரிசு ( 13 ) ------ ` 1,000**

ஒட்டுமெத்தமாக **39 பரிசுகள்** வழங்கப்பெறும். பங்கேற்கும் பள்ளி, கல்லூரிகளுக்கும் உரிய மாணவா்களுக்கும் பங்கேற்ப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பெறும்.

## அறிவியல் கண்டுபிடிப்புகளின் செயல்மாதிரிகள் பற்றிய சுருக்கவரைவு

தெரிவுசெய்து அனுப்பப்பெறும் அறிவியல்கண்டுபிடிப்புகள் அறிவியல் எண்ணங்கள் பற்றிய செயல்மாதிரிகளின் சுருக்கமான, தெளிவான விவரத்தை இரண்டுபக்க அளவில் **( தமிழ் - ஐஸ்வர்யா புள்ளி எழுத்துருவில் 1.5 இடைவெளியில் )** தமிழில் தட்டச்சு செய்து அச்சுப்படியுடன் குறுந்தகட்டிலும் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும். எத்தனைக் காட்சிப்படித்தங்கள் பரிந்துரைந்து அனுப்படவுள்ளனவோ அத்தனைக்கும் தனித்தனிச் சுருக்கவரைவு அனுப்பப்படல் வேண்டும்.

அறிவியல் கண்டுபிடிப்பைக் காட்சிப்படுத்துவதற்கு தேவைப்படும் இடஅளவு, தேவைப்படும் பிற வசதிகள் பற்றிய விவரத்தைச் சுருக்கவரைவுடன் அனுப்புதல் வேண்டும். **இவை அனைத்தும் அறியல்தமிழ்க் கண்காட்சியின் அமைப்பாளர் முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்.**

## இறுதிநாள்

அறிவியல் கண்டுபிடிப்புகளின் செயல்மாதிரிகள், அவைபற்றிய சுருக்கவரைவுகள் முதலியவற்றை **2010 அக்டேபர் 12ஆம் நாளுக்குள்** அனுப்புதல் வேண்டும்.

**<u>அறிவியல் தமிழ்க் கண்காட்சி அமைப்பாளர்</u>**

முனைவர். சி. நமச்சிவாயம்
அறிவியல் புல முதன்மையர் (Dean of Science)
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
சுற்றுச் சூழல் அறிவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் -641 046.
மின் அஞ்சல் - cnamasivayam@yahoo.com தொலைபேசி – 0422 2428391

## தங்குமிடவசதி

கண்காட்சியில் பங்கேற்கும் மாணவ மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தங்குமிட வசதிகள் பல்கலைக்கழகத்தால் செய்துதரப்படும்.

## பயணப்படி

**கண்காட்சியில் பங்குபெறும் பள்ளி மற்றும் கல்லூரியின் ஒவ்வொரு மாணவர் / மாணவிக்கும், அவருடன் வரும் அறிவியல் துறையைச் சார்ந்த ஒரு ஆசிரியருக்கும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பயணப்படி வழங்கப்பெறும்.**